சிறப்பிதழ்
Special Issue

2-ஆடி 2050
18-July 2019

ISSN : 2321-0737

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*
*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*
*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. Oppila Mathivanan*
*Dr. R. Rajagopal*
*Dr. Aranga. Pari*
*Dr. P.M. Jamahir*
*Dr. S. Rajaram*
*Dr. R. Velmurugan*
*Dr. S. Chitra*
*Dr. E.R. Ravichandran*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. K. Thilagavathi*
*Dr. P. Velmurugan*
*Dr. G. Sheik Meeran*
*Dr. P. Selvakumar*
*Dr. M. Karunanithi*
*Dr. A. Kaleel Rahman*
*Dr. A. Senthil Kumar*
*Dr. S. Tamil Velu*
*Dr. M. Arunachalam*
*Dr. R.Vijayarani*
*Dr. V. Dhanalakshmi*
*Dr. S. Ramesh*
*Dr. J. Chandrakala*
*Dr. C. Prabhakaran*
*Dr. P. Santhi*
*Prof. Balasundaram Elayathamby*
*Dr. A. Thoufiq Rameez*
*Dr. S. Bharathi Prakash*
*Dr. J. Raja*
*Dr. J. Selva Kumar*
*Dr. D. Alagudurai*
*Dr. Chandrika Subramaniyan*
*Dr. Manivannan Murugesan*
*Dr. V. Kalathi*
*Mr. G. Senthil*

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL
UGC Journal No.40719

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)
(கலை & மனிதவியல்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)
(Arts & Humanities)

சிறப்பிதழ் : பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019
தமிழ்த்துறை (தன்நிதி)
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)
பொள்ளாச்சி - 642 001, தமிழ்நாடு, இந்தியா.

## தமிழ் இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள்

சிறப்பிதழ் ஆசிரியர்
Special Issue Editor
முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா
உதவிப்பேராசிரியர்

பதிப்புக்குழு உறுப்பினர்கள்
முனைவர் த. பரமேஸ்வரி (துறைத்தலைவர்)

முனைவர் த. கீதாஞ்சலி முனைவர் ந. பிரகாஷ் முனைவர் இரா. ஜெயந்தி
முனைவர் ம. சித்ரகலா முனைவர் மு. சுகந்தி பேரா. ர. சூர்யா பேரா. அ. மகபுபூ
தமிழ்த்துறை (தன்நிதி), நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி -6

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

4 பகுதி-2 சிறப்பிதழ் Special Issue

| | | | |
|---|---|---|---|
| 95. | ந. வெங்கடேஷ் | திருக்குறளில் மனித மாண்புகள் | 346-348 |
| 96. | சு.நளினி | சங்கப் பாடல்களில் மனிதநேயம் | 349-351 |
| 97. | சௌ. மைதிலி | மணிமேகலை உணர்த்தும் மனிதநேயம் | 352-355 |
| 98. | ஜோ. ஜீவா | மனித நேய நோக்கில் மலர்வதியின் 'காத்திருந்த கருப்பாயி' நாவல் | 356-358 |
| 99. | டு. ஜோஸ் விஜி | நீலபத்மநாபன் கவிதைகளில் மனிதநேய மாண்புகளின் இழப்பு | 359-362 |
| 100. | B.S.ஆஷா | குறுந்தொகையில் திணைசார் மக்களின் மனித நேய மாண்புகள் | 363-365 |
| 101. | அ.மகபூபூ, | சிலப்பதிகார மாந்தர்களின் மனிதநேயமாண்புகள் | 366-369 |
| 102. | பொ.மா.பழனிசாமி | தமிழ் இலக்கியத்தில் மனிதநேய வாழ்வியல் மதிப்புகள் | 370-374 |
| 103. | பா.அருள்ஜோதி | சங்க புறப்பாடல்களில் மனித நேய சிந்தனைகள் | 375-379 |
| 104. | ம.சித்ரகலா | சுந்தரகாண்டத்தில் மனிதநேய மாண்புகள் | 380-385 |
| 105. | அமுதன் | இலக்கியத்தில் மனித நேயம் தமிழ் இலக்கியங்களை முன்வைத்து | 386-389 |
| 106. | S.Jagadambal & Dr. K. Perumal | Spirituality Fosters Humanity | 390-393 |
| 107. | டாக்டர். சு.பிரசாத் & செ.சண்முகவடிவு | சித்தர் இலக்கியங்களில் மனிதநேயம் | 394-399 |
| 108. | த. மகிலா ஜெனி | விவேக சிந்தாமணியில் மனித நேயம் | 400-403 |
| 109. | த.ரதீஸ் | இலக்கியத்தில் மனிதநேயம் | 404-407 |
| 110. | ர.மாலதி ரவீந்திரன் | சங்க இலக்கியங்களில் மனிதநேயம் | 408-410 |
| 111. | திருமதி.க.தேவி | இலக்கியங்களில் மனிதநேயச் சிந்தனைகள் | 411-416 |
| 112. | ந.ஜெயசுதா | இலக்கியங்களில் மனிதநேயம் | 417-419 |
| 113. | இரா.ஜெயந்தி | திருக்குறள் காட்டும் மனிதநேயக் கருத்தாக்கம் | 420-423 |
| 114. | க. உஷா | திருக்குறளும் மனித மாண்புகளும் | 424-427 |
| 115. | D. ஞானசௌந்தரி | கீதைகூறும்ஞானம் | 428-432 |
| 116. | க.முத்துஇலக்குமி | பாரதியார் கவிதைகளில் மனிதநேயப்பண்பு | 433-436 |
| 117. | க.தனலட்சுமி | தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம் | 437-439 |
| 118. | பொ.வீரசித்திவிநாயகன் | இலக்கியங்களில் திருக்குறள் உணர்த்தும் மனிதநேயமும் மருத்துவமும் | 440-442 |
| 119. | மு.சுகந்தி | புறநானூற்றுப் பாடல்களில் மனிதநேயம் | 443-446 |
| 120. | த.பரமேஸ்வரி | புதுக்கவிதைகள் உணர்த்தும் புரையோடிய மனிதநேயம் | 447-450 |
| 121. | பேரா ர.சூர்யா | மனிதநேயச் சிந்தனைகள் | 451-453 |
| 122. | மு.அபிநயா | கருவறைவாசனையில் பெண்ணுலகம் | 454-456 |
| 123. | ஜோதிமணி.து | காட்டுக்குட்டியில் மாண்டுபோகும் மனிதநேயம் | 457-460 |
| 124. | இரா.விஷ்ணுப்பிரியா | புலமையும் மனிதநேயமும் | 461-469 |
| 125. | திலகவதி பு | புகழேந்தி புலவர் இயற்றிய நல்லதங்காள் கதையில் மானுடம் | 470-473 |

# சித்தர் இலக்கியங்களில் மனிதநேயம்

செ.சண்முகவடிவு,
முனைவர் பட்ட ஆய்வாளர், உதவிப்பேராசிரியர், என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

டாக்டர். சு.பிரசாத்
நெறியாளர், உடற்கல்வி இயக்குனர், அரசு கலைக்கல்லூரி, பரமக்குடி,
இராமநாதபுரம் மாவட்டம்.

## முன்னுரை:

மனம் + இதன் = மனிதன். மனதை இதமாக வைத்துக் கொள்பவன் மனிதன். மனிதனை மனிதனாக அடையாளம் காட்டுவது மனிதநேயப் பண்பாகும். இம்மனிதநேயமே மனித இனத்தை விலங்கினத்திலிருந்து பிரித்துக்காட்டும் எல்லைக்கோடுகளில் ஒன்றாக உள்ளது. மனிதநேயம் பகுத்தறிவின் விளைவாகத் தோன்றக்கூடியது. பகுத்தறிவின் விளைவாகத் தோன்றும் மனிதநேயமே சமூகப் பயன் நல்கக்கூடியது. மனித சமுதாயம் மொழியினால், பழக்கவழக்கங்களினால், கலாச்சாரத்தினால் பல்வேறு வேறுபாடுகளைத் தனக்குள்ளே கொண்டிருந்த போதும் மனிதநேயம் என்ற மகத்தான பண்பினால் ஒன்றுபட்டு நிற்கின்றது. நாம் அனைவரும் ஒற்றுமையுடனும், அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்கு நம் ஒவ்வொருவரிடத்திலும் மனிதநேயம் மலர வேண்டும். இத்தகைய மனிதநேயம் சிறக்க சித்தர்கள் காட்டும் வாழ்வியல் நெறிகளான அன்பு நெறி, ஆசை சீரமைத்தல், சினம் தவிர்த்தல், ஓரிறைக் கோட்பாடு, உடலோம்பல், பிறஉயிரைக் கொல்லாமை, பசிப்பிணி போக்கல், சாதி மத மறுப்புக் கொள்கை ஆகியவை குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

## மனிதநேயம்:

மனிதன் தன்னை அறிதலோடு, பிறரையும் நேசித்து அவர்களோடு அன்புபாராட்டி அவர்களுக்கு உற்றுழி உதவுகிற நற்பண்பையே மனிதநேயம் எனலாம். மனிதநேயம் என்பது நாடு, இனம், மொழி என்ற எல்லைகளைக் கடந்து நிற்பது. மனித இனத்தின் நாகரிகப் பண்பாட்டுடன் புனைந்து நிற்பது. பிறஉயிர்களை நேசிப்பதற்கும் இம்மனிதநேயப் பண்பே அடிப்படையாக அமைகிறது. உயிரின் ஒருமைப்பாட்டிற்கும், மனிதஇன வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும் இப்பண்பே அடித்தளமாக அமைவதால் இதனை சித்தர்கள் வாழ்வியல் நெறிகளாகக் கண்டுணர்ந்தனர்.

## சித்தர்-சொல் விளக்கம்:

சித்தர் என்னும் சொல்லிற்கு “ஞானம் கைவரப் பெற்றவர்” எனப் பொருள் கொள்ளப்படுகிறது. சித்தம் என்பது மனமாகும். தன்னிச்சையாகத் திரியும் மனதினை அடக்கி, அதனை இறைவனிடம் செலுத்துகின்றவர்கள் சித்தர்கள் ஆவர். கடவுளைக் காண முயற்சிப்பவர்களைப் “பக்தர்கள்” என்றும் கண்டு தெளிந்தவர்களைச் “சித்தர்கள்” என்றும் தேவாரம் கூறுகிறது. அறியாமை அகற்றும் ஆசிரியர்களாக, நோய் தீர்க்கும் மருத்துவர்களாக, அறமுரைக்கும் சான்றோர்களாக, அறிவியல் அறிஞர்களாக, பொய்மை களைந்திடும் புரட்சியாளர்களாக பல சித்தர்கள் வாழ்ந்திருக்கின்றனர்.

## சித்தர்களின் கொள்கை:

சித்தர்கள் மக்களின் சமுதாய வாழ்வில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். இவர்கள் மூடநம்பிக்கைக்கு இடந்தராதவர்கள்.